**கவனிக்க.-** 2018, ஒகத்து மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2085 - 2018 අගෝස්තු මස 17 වැනි සිකුරාදා - 2018.08.17

2085 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1664 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1700 |


**கவனிக்க.-** நிதி சட்டமூலம் 2018, ஒகத்து மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஒகத்து மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1661-B 81440-5,403 (2018/08)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி – மாத்தளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்த பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரரின் வயது 40 வயதிற்கு குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 வயதாகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, செத்தெம்பர் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். எஸ். என். த சில்வா,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, யூலை 30.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தளை | உக்குவெல | மாத்தளை தெற்கு பிரிவின் உக்குவெல பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தளை. |

08-581

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி – கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்த பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரரின் வயது, 40 வயதிற்கு குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 வயதாகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, செத்தெம்பர் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். எஸ். என். த சில்வா,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, யூலை 30.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | அக்குறணை | ஹாரிஸ்பத்துவ குருந்துகஹா எல பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |
| கண்டி | பாத்தஹேவாஹெட்ட | பாத்தஹேவாஹெட்ட உடதெனிய பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |
| கண்டி | யட்டிநுவர | உடுநுவர யட்டிநுவர பிரிவின் உல்கம்பாய பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |

08-582

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - மாத்தளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரரின் வயது, 40 வயதிற்கு குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, செத்தெம்பர் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். எஸ். என். த சில்வா,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, யூலை 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தளை | தம்புள்ள | இனாமலுவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மாத்தளை வடக்கு பிரிவின் விவாக (பொது/ கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தளை. |

08-583

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழியில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரரின் வயது, 40 வயதிற்கு குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 வயதாகும்.)

4. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

5. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, செத்தெம்பர் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். எஸ். என். த சில்வா,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, யூலை 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | வலப்பனை | உடபலாத்த தெற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வலப்பனை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ்மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா. |

08-584

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழியில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரரின் வயது, 40 வயதிற்கு குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 வயதாகும்.)

4. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

5. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, செத்தெம்பர் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். எஸ். என். த சில்வா,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, யூலை 30.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | தெல்தோட்டை | உடதெல்தோட்டை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பாத்தஹேவாஹெட்ட பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ்மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |

08-585

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரரின் வயது 40 வயதிற்கு குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, செத்தெம்பர் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். எஸ். என். த சில்வா,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, யூலை 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | பாத்ததும்பரை | பாத்ததும்பர பிரிவின் பிறப்பு, ஜம்புகஹ பிட்டிய பிரதேசத்தின் மேலதிக விவாக (பொது/கண்டிய) பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |
| கண்டி | பாத்ததும்பரை | பாத்ததும்பர பிரிவின் பிறப்பு, கலுகலவத்த பிரதேசத்தின் மேலதிக விவாக (பொது/ கண்டிய) பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |

08-586

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்*

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.*

*2. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்க இயலும்.*

*3. விண்ணப்பதாரரின் வயது, 40 வயதிற்கு குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.*

*4. விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.*

*5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.*

*6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.*

*7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, செத்தெம்பர் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.*

எஸ். எஸ். என். த சில்வா,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, யூலை 19.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | வெலிமடை | தம்பவினி பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடுகிந்த பிரிவின் விவாக (பொது/ கண்டிய) பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை. |

08-587

## இலங்கை வான்படை

நிரந்தர/தொண்டர் வான்படை

**வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள்**

1. இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறைகளில் வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன :

**அடிப்படை கல்வித் தகைமைகள் :**

2. க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆகியவற்றில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள் இருத்தல் வேண்டும்.

**தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும் :**

3. **ஒவ்வொரு துறைக்கு தேவைப்படும் கல்வி தகைமைகளும் :**

(அ) ***வானூர்தி பொறியியல் (ஆண்/பெண்)***

(அ) வான் அமைப்பு எந்திரவியலாளர் (Aircraft Structural Technician)
(ஆ) வானூர்தி இயந்திரவியலாளர் (Aircraft Engine Technician)
(இ) வானூர்தி மின்னியல் கருவிகள் எந்திரவியலாளர் (Aircraft Electrical and Instrument Technician)
(ஈ) கருவிகள் பாதுகாப்பு உதவியாளர் (Aircraft Safety Equipment Technician)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

மற்றும்

தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் முழுநேர இரண்டு ஆண்டு வானூர்தி மின்னியல் கருவிகள் எந்திரவியலாளர் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி பாடசாலை ஒன்றில் முழுநேர இரண்டு ஆண்டு (இலத்திரனியல்/ மின்னியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் விஷேட தகைமையாக கருதப்படும்.

(ஆ) ***பொது பொறியியல் (ஆண்)***

(1) ஆயுத இயந்திரவியலாளர்
(2) மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர்
(3) மேற்பரப்பு தொழில்நுட்ப உதவியாளர்
(4) உலோகத் தகடு இயந்திரவியலாளர்
(5) மரக்கலை இயந்திரவியலாளர்
(6) பொது இயந்திரவியலாளர்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி மேலதிகத் தகைமையாகும்.

மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் தொண்டர்/ நேரடி வான் படையில் ஆட்சேர்ப்பது தொடர்பாக மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் கற்கைநெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(7) மோட்டார் வாகன இயக்குநர்
க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்திகள். இலகுரக வாகன அனுமதிப் பத்திரம் இருத்தல் கட்டாயமாகும். கனரக வாகன அனுமதிப் பத்திரம் இருத்தல் ஆட்சேர்தலில் முன்னுரிமை வழங்கப்படும்.

(இ) ***மின்னணுவியலும் தொலைத்தொடர்பும் பொறியியல்***

(1) வான் வானொலி தொழில்நுட்பவியலாளர் (ஆண்)
(2) வான் தொலைத்தொடர்பாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி இருத்தல் வேண்டும்.

(3) வான்வழி தகவல் பரிமாற்றுதல் (ஆண்)
(4) கணினி தொழில்நுட்பவியலாளர் (ஆண்)
(5) தொலைபேசி இயக்குநர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். கணினி தொழில்நுட்பவியலாளர் தொடர்பாக கணினி இயந்திரவியலாளர் துறையில் பாடநெறி பூர்த்தி செய்திருத்தல். மேலும் குறிப்பிட்ட துறையில் அனுபவம் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

(ஈ) ***வைத்தியத்துறை*** :

(1) தாதி உதவியாளர் (ஆண்/பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச் சித்தியும் மேலதிகமாக ஒரு பாடத்தில் திறமைச் சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் விஞ்ஞானம்/கணிதம்/விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். சுகாதார அமைச்சு மூலமாக உயர் பயிற்சிநெறியைப் பெற விசேட தகைமையாகக் கருதப்படும். க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி மேலதிக தகைமையாகும்.

| | |
|---|---|
| க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம்/இணைந்த கணிதம் அல்லது பௌதிகவியல்/விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் சித்திபெற்றி ருத்தல். இரசாயனவியல் தொடர்பாக திறமைச்சித்தி பெற்றிருத்தல் | மருந்தாக்கர் (ஆண்)/ மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் |
| க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்/ விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல் உயிரியலில் திறமைச் சித்திபெற்றிருத்தல் | ECG/EET/EEG தொழில்நுட்பவியலாளர் (ஆண்) |
| க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியல்/உயிரியல்/இணைந்த கணிதம் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல். பௌதிகவியல் தொடர்பாக திறமைச் சித்தி பெற்றிருத்தல் | ஒகியுபேஷனல் தெரபிஸ்ட்/ X Ray தொழில்நுட்பவிய லாளர், பிசியொதெரபிஸ்ட் |
| க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியல்/பௌதிகவியல்/விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் இரண்டில் சாதாரண சித்தி பெற்றிருத்தலுடன். உயிரியல்/இணைந்த கணிதம் ஆகியவற்றில் திறமைச் சித்தியும் ஒரே அமர்வில் பெற்றிருத்தல் | சுகாதார பரிசோதகர் (ஆண்) |
| க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம்/இணைந்த கணிதம் அல்லது பௌதிகவியல்/விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் 3 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் | தாதி டிப்ளோமா |

(உ) ***பல் வைத்திய உதவியாளர் (ஆண்/பெண்)***

*க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச் சித்தியும் மேலதிகமாக ஒரு பாடத்தில் திறமைச் சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் விஞ்ஞானம்/ கணிதம்/ தொழில்நுட்ப பிரிவு ஆகியவற்றில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். சுகாதார அமைச்சு மூலமாக உயர் பயிற்சி நெறியைப் பெற்றிருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.*

(ஊ) ***பரிபாலனத்துறை (ஆண்/பெண்)***

(1) பரிபாலன உதவியாளர்

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கிலம், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் பரிபாலன துறைக்கு மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.*

(2) கணக்கியல் உதவியாளர்

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் கணக்கியல் துறைக்கு மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.*

(எ) ***தொழிற்பாடுகள் துறை*** :

(1) வான் தொழிற்பாடுகள் (ஆண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தியும், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.*

(2) தீயணைப்பாளர் (ஆண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். கனரக வாகன அனுமதிப்பத்திரம் இருத்தல் ஆட்சேர்த்தலின் போது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.*

(3) பூமி தொழிற்பாட்டாளர் (ஆண்/பெண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.*

(ஐ) ***உபகரணத் துறை*** :

(1) வழங்குநர் உதவியாளர் (ஆண்/பெண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கில மொழியில் சித்தியும், கணிதம்/ விஞ்ஞானம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் உபகரணத் துறைக்கு விசேட தகைமையாகக் கருதப்படும்.*

(2) வானூர்தி எரிபொருள் வழங்குநர் (ஆண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சித்தியும், கணிதம்/ விஞ்ஞானம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் உபகரணத் துறைக்கு விசேட தகைமையாகக் கருதப்படும்.*

*(3)* உணவக மேற்பார்வையாளர் (ஆண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.*

*(4)* போசனசாலை மேற்பார்வையாளர் (ஆண்)

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். சுற்றுலாத் துறையில் அனுமதி பெற்ற ஹொட்டல்களில் பெற்ற அனுபவம் துறைசார்ந்த தகைமை இருப்பின் ஆட்சேர்ப்பின் போது முதலுரிமை வழங்கப்படும்.* Waiter/ Barman/ House Keeper/ Room Boy/ Room Attendance/ Room Steward)

(ஒ) ***பொலிஸ் துறை (ஆண்/பெண்)***
*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் ஆங்கிலம், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்திகள். உயரம் ஆண் 5 அடி 8 அங்குலமும் அதற்கு மேலும். பெண் 5 அடி 6 அங்குலமும் அதற்கு மேலும் இருப்பின் முதலிடம் வழங்கப்படும்.*

**இலங்கை வான்படை நிரந்தர வீரர்/வீராங்கனைகளுக்கான நேரடி ஆட்சேர்ப்புக்கான வெற்றிடங்கள் :**

*2. (அ)* ***தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமை மற்றும் தொழிற் தகைமையும்***

இரசாயன தொழில்நுட்பவியலாளர் (ஆண்)

(அ) *க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் உயிரியல்/இரசாயனவியல்/ பௌதிகவியல் ஆகியவற்றில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.*

(ஆ) இரசாயன தொழில்நுட்பவியலாளர் தொடர்பாக டிப்ளோமா இருத்தல் அல்லது அதற்கு சமனான தகைமையுடன் *02* வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

5. ***ஏனைய தகைமைகள் :***

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் இணைவதற்குப் பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*(1)* *தேசிய இனம்.-* ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

*(2)* *வயது (2019, சனவரி 15 ஆந் திகதியன்று) -*

*நிரந்தர :*
*ஆண் - 18* வயதிற்கு குறையாமலும் *23* வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்
பெண் - *18* வயதிற்கு குறையாமலும் *22* வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

தொண்டர் :
*ஆண் - 18* வயதிற்கு குறையாமலும் *30* வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்
பெண் - *18* வயதிற்கு குறையாமலும் *28* வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

நேரடி ஆட்சேர்ப்பு :
*ஆண் - 18* வயதிற்கு குறையாமலும் *28* வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்
பெண் - *18* வயதிற்கு குறையாமலும் *26* வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

*(3)* *உயரம்.-* ஆண் - *5 அடி 5 அங்குலமும்* (165 cm) *உம் அதற்கு மேலும் ;*
பெண் - *5 அடி 3 அங்குலமும்* (160 cm) *உம் அதற்கு மேலும்.*

*(4)* *உடல் நிறை.-* ஆண் *17* < உடற்பருமன் சுட்டி (BMI) < *26*
பெண் *17* < உடற்பருமன் சுட்டி (BMI) < *25*

$$\text{உடற் பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம்}^2 \text{ (மீ)}} \;;$$

*(5)* *பார்வை வர்ணப் பதிவு மட்டம் .-* CP*2* ;

(6) *மார்பு*.- குறைந்தது 32 அங்குலம் (ஆண்) ;

(7) தொலைப்பார்வை.- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்) ; தொண்டர்/நேரடி ஆட்சேர்ப்பு பிரிவுக்கு மாத்திரம் இரண்டு கண்களிலும் 6/18 மூக்குக் கண்ணாடி பயன்படுத்தியும் 6/6 இருத்தல் வேண்டும்.)

(8) *குடியியல் நிலை* :

(அ) நிரந்தர வான்படை வீரர்/நிரந்தர வான்படை வீராங்கனை விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான்படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைவதுடன் தொழில் பயிற்சியைப் பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

(ஆ) தொண்டர் வான்படை வீரர்/தொண்டர் வான்படை வீராங்கனை விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான்படையில் இணைந்து ஓராண்டு பூர்த்தியடைவதுடன் தொழில் பயிற்சியைப் பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

(இ) நேரடி ஆட்சேர்ப்பில் இணையும் வான்படை வீரர்/வான்படை வீராங்கனைகள் தமது அடிப்படைப் பயிற்சியைப் பூர்த்திசெய்த பின்னர் விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

(ஈ) பூமி தொழிற்பாட்டாளர் பிரிவில் உள்ள வான்படை வீராங்கனைகள் இணைந்து தொழிற்பயிற்சியைப் பூர்த்தி செய்து நான்கு ஆண்டுகள் கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

6. பந்தி 2, 3, 4 இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித் திறமைகளை நிறைவுசெய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற்தகைமை மட்டத்தைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். தேவையான உயரம், நிறை, கண் பார்வை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படைத் தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

7. விளையாட்டுத்துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற்கொள்ளப்படும்.

**8. சேவை நிபந்தனைகள் :**

அ. தேர்வுநாடி தொடக்கத்தில் ஏனைய பதவி வரிசைகளுக்குப் போன்ற அதே விதத்தில் வான்படையில் ஒரு வான்படை வீரர்/ வான்படை வீராங்கனைகளாக சேர்க்கப்பட்டு அடிப்படை யுத்தப் பயிற்சியொன்றை மேற்கொள்வர். அடிப்படை பயிற்சி திருப்திகரமாக முடிவடைந்ததும் மற்றைய பயிற்சிக்கான காலப்பகுதி பயிலிளவல் சேவையின் கிளையைப் பொறுத்து இருக்கும். பின் ஏனைய பதவி வரிசையிலான ஆட்சேர்ப்பு நீக்கப்பட்டு வான்படை வீரர்/ வான்படை வீராங்கனைகளாக சேவைக்குச் சேர்க்கப்படுவர்.

ஆ. வான்படை வீரர்/ வான்படை வீராங்கனைகள் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான் படை ஏவுநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

இ. வான்படை வீரர்/ வான்படை வீராங்கனைகளாக பயிற்சி பெறும் காலப்பகுதியின் போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

ஈ. ஒவ்வொரு வான்படை வீரர்/வான்படை வீராங்கனைகளுக்கு அனைத்து வகை சீருடைகள் உபகரணங்கள் மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

உ. வான்படை வீரர்/ வான்படை வீராங்கனைகள் பயிற்சிக் காலத்தின்போது வான்படை வீரர்/ வான்படை வீராங்கனைகள் உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்டு உணவும் வழங்கப்படும்.

ஊ. ஒரு வான்படை வீரர்/வான்படை வீராங்கனை பயிற்சியின் போது ஆணையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய வான்படை வீரர்/ வான்படை

வீராங்கனை பொருட்டு அதுகாலவரையில் இலங்கைக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கைக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

எ. ஒரு வான்படை வீரர்/ வான்படை வீராங்கனை தமது பயிற்சியின் போது எச்சமயத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கைக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கைக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின் சார்பில் வான்படை ஏவுநருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும்படியும் தேவைப்படுத்தப்படுவர்.

ஏ. பெற்றோர் அல்லது பாதுகாவலர் உட்பந்திகள் ஊ, எ தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 28 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத் தேர்வுநாடிகள் வான்படை வீரர்/ வான்படை வீராங்கனைகள் நியமிக்கப்படுவதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப்படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

ஐ. பந்தி 02 இலும் 03 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வு நாடிகள் முதலாவது நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெறுபவர்கள் அலுவலர் தேர்வு நாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதுடன் (எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை வான்படையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச்சபைக்கு உட்படுத்தப்படுவர். தேவைப்படின் விமானத்தில் செல்லும் திறமையும் பரீட்சிக்கப்படும் அலுவலர் தரப்பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். குடும்ப நல பரீட்சையும் பின்னர் இறுதி நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். ஒவ்வொரு கிளைகளுக்கும் தேவைப்படும் தேர்வு நாடிகளின் எண்ணிக்கை அவரவர்கள் இந்த நேர்முகப்பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

ஒ. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத வான்படை வீரர்/ வான்படை வீராங்கனைகளின் உணவுக் கொடுப்பனவு உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

ஓ திருமணமாகிய வான்படை வீரர்/ வான்படை வீராங்கனைகள் (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்.

ஔ. எல்லா வான்படை வீரர்/வான்படை வீராங்கனைகள் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

அஅ. எல்லா வான்படை வீரர்/ வான்படை வீராங்கனைகள் வான் படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

9. **தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள் :**

(அ) நிரந்தர வான்படை வீரர்/நிரந்தர வீராங்கனைகள் தொடர்பாக :
தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளுமாறு கேட்டுகப்படுவார்கள். மேலும் 8 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 4 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுதலானது மீண்டும் அழைக்கப்படும்போது சமுகமளிக்க வேண்டும். 8 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

(ஆ) தொண்டர் வான்படை வீரர்/தொண்டர் வீராங்கனைகள் தொடர்பாக :
தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொண்டர் வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 5 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். 5 ஆண்டுகள் கழிந்த பின் வான்படை தளபதியின் அனுமதியுடன் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

10. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்.**- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

*11.* **சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

(அ) தற்போதிலிருந்து 2020 வருடத்திற்கான வான்படை வீரர்களுக்கு ஏற்புடையதாக அடிப்படைச் சம்பள விகிதங்கள் பின்வருமாறு :

| வருடம் நிலை | 2018 ஆம் வருடத் திற்கான ரூபா | 2018 ஆம் வருடத் திற்கான மாறுபடும் ரூபா | 2020 ஆம் வருடத் திற்கான ரூபா |
|---|---|---|---|
| விமான வீரன் | 2,44,608.00 | 81,456.00 | 3,54,480.00 (7X300-19X370) |
| முன்னணி விமான வீரன் | 2,52,060.00 | 80,004.00 | 3,65,280.00 (4X300-19X370) |
| கோப்ரல் | 2,59,512.00 | 78,648.00 | 3,76,080.00 (1X300-10X370-9X495) |
| சார்ஜன்ட் | 2,67,996.00 | 77,148.00 | 3,88,560.00 (3X370-9X495-3X660) |
| பிளைட் சார்ஜன்ட் | 2,73,996.00 | 76,044.00 | 3,97,440.00 (1X370-9X495-3X660) |
| அதிகாரம்பெற்ற அலுவலர் | 2,85,204.00 | 74,196.00 | 4,13,760.00 (7X495-14X660) |
| பிரதான அதிகாரம்பெற்ற அலுவலர் | 3,19,404.00 | 68,796.00 | 4,63,260.00 (13X660) |

*12.* **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்:-**

(அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2018, ஒகத்து 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, கட்டளை ஆட்சேர்ப்பு அலுவலகம், இலங்கை விமானப்படை தொழிற்துறை பயிற்சிப் பாடசாலை, ஏக்கலை" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை விமானப்படை வான்படை நிரந்தர/ தொண்டர் வீரர்/ வீராங்கனைகளுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் / கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/ குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பகாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின்/ குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச்சட்டக்கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ்.

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழிற்துறை/ தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ்.

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பதாரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்புவாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பதாரரின் தொழில் தருநரிடமிருந்து. (தொழில் புரிவாராயின்).

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலியவற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டா.

(உ) சான்றிதழ் மூலப்பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டாம்.

(ஊ) சான்றிதழ் மூலப்பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்பியமைக்கு விமானப்படை பொறுப்பை ஏற்கமாட்டாது.

13. நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம் நேரம் தேதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டா.

14. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பதாரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பதாரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்.

15. தங்கள் இறுதி நேர்முகப்பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பதாரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பதாரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற்தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தெரிவு செய்யப்படுவர்.

16. விண்ணப்பதாரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பதாரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தணித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகைமையிழக்கச் செய்யும்.

15. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

16. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

கே. வி. பி. ஜயம்பதி,
WWWV, RWP, RSP and three Bars, VSV, USP,
MMSc (Strat Stu-China), fndu (China),qhi,
எயார் மார்ஷல்,
வான்படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படையில் . . . . . . பிரிவில் ஆண்/பெண் வான்படை வீரர்/வீராங்கனைக்கான விண்ணப்பம்**

1. தேசிய இனம் :----.
(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் தேதியும் குறிப்பிடுக.)
2. முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டைப்படி) :----.

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

4. நிரந்தர முகவரி :----.

5. தற்போதைய அஞ்சல் முகவரி :----.

6. பிறந்த திகதி :- ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.
வயது (2019, சனவரி 15 ஆந் திகதிக்கு) : வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

7. உயரம் :- -----செ. மீ. (---- அடி ----- அங்குலம்)

8. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் :----.

9. மாவட்டம் :----.

10. தேர்தற் தொகுதி :----.

11. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

12. தொலைபேசி இலக்கம் :----.

13. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா? :----.

14. பால் :----.

15. பாடசாலை பற்றிய விபரங்கள் :----.

16. பாடசாலை அத்துடன்/அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலை / சர்வகலா சாலை பெயர்கள் | பரீட்சையின் தன்மை | ஆண்டு | சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>வேறு | | |

17. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள்:-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப்பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

18. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

19. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

20. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் தேதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

21. புறம்பான சாதனைகள் (பாடசாலை / பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகளை (தேதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

22. இதற்கு முன் ஆயுதப் படையில், தொண்டர் படையில், பயிலிளவல் படையணில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

23. இலங்கை வான் படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தாரா ? அவ்வாறாயின், விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

24. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின், விபரங்கள் தருக :----.

25. இதற்கு முன்னர் அரசாங்கத்திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில், கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி /தேசிய வங்கி /பல்கலைக்கழகங்கள் /அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

26. நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் :

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

27. விண்ணப்பகாரர் கைச்சாத்திட வேண்டிய வெளிப்படுத்துகை :

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் என் அறிவிக்கும் விசுவாசத்துக்கும் ஏற்ப சரியானவை என என் மீது ஆணையாக உறுதிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

------,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :----.

28. விண்ணப்பகாரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை

அ. இலங்கை வான் படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 27 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . அவருக்கு நான் பெற்றோர் /பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பகாரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொறுப்பாளியாவேன் :

(1) பயிற்சியின் போது ஆணைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கைக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிக் கொடுப்பதற்கும்;

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாடுகள் காரணங்களுக்காக ஆணை வழங்கப்படுவதற்குத் தகுதியற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும் .

------,
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
தேதி :----.

------,
முதலாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
தேதி :----.

------,
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
தேதி :----.

8-785

---

## இலங்கை நிரந்தர வான்படை

### பயிலிளவல் ஆண்/பெண் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழ்வரும் பிரிவுகளில் பயிலிளவல் ஆண்/ பெண் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன :-

(அ) பொதுக்கடமை விமான ஓட்டுநர் பிரிவு (ஆண்/பெண்) ;
(ஆ) நிருவாக பிரிவு (ஆண்) ;
(இ) நிருவாக ரெஜிமன்ட் பிரிவு (ஆண்/பெண்) ;
(ஈ) வான் வழி நடத்துநர் பிரிவு (வான் வழி கட்டுப்பாடு) (ஆண்) ;
(உ) பொலிஸ் பிரிவு (ஆண்/பெண்) ;
(ஊ) தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு (ஆண்).

2. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

**அடிப்படை கல்வித்தகைமை :**

***பட்டப்படிப்பு அல்லாத கல்வித்தகைமை*** : குறைந்தபட்சம் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் இல்லாமல்)

***பட்டப்படிப்பு கல்வித்தகைமை*** : குறைந்தபட்சம் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் எந்த பிரிவிலாவது ஒரே அமர்வில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். பல்கலைக்கழக அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

*3*. **விஷேட தகைமை** :

BSc. (Aviation Studies) **பட்டப் பயிற்சிக்கு உட்செல்வதற்கான தகைமை (ஜெனரல் சேர். ஜோன் கொத்தலா வலை பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட)**

***(அ) பொதுக்கடமை விமான ஓட்டுநர்/வான் வழி நடத்துநர் பிரிவுகள் (வான் வழிக் கட்டுப்பாடு)*** :
பட்டப்படிப்பு அல்லாத கல்வித்தகைமையுடன் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக /உயிரியல்/ தொழில்நுட்ப பிரிவுகளில் (தேவையை பொருத்து) மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

***(ஆ) நிருவாக பிரிவு/நிருவாக ரெஜிமன்ட்/பொலிஸ் பிரிவு பிரிவுகள்*** :
பட்டப்படிப்பு அல்லாத கல்வித்தகைமையுடன் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக /உயிரியல்/ வர்த்தக/தொழில்நுட்ப /கலை பிரிவுகளில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

***(இ) தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு*** :
பட்டப்படிப்பு அல்லாத கல்வித்தகைமையுடன் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக பிரிவில் / தொழில்நுட்ப பிரிவில் தகவல் தொழில்நுட்பம் ஒரு பாடமாக சித்தி பெற்று இருப்பதுடன் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

***(ஈ) விஷேட குறிப்பு*** :
Pearson/ Edexcel/ சர்வதேச சாதாரண/உயர்தர மற்றும் GCSE, GCE மற்றும் கேம்பிரிட்ஜ் பரீட்சை பெறுபேறுகள் இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்படும் பெறுபேறுகள் அதற்கு சமனான தகைமை என தங்களால் நிருபிக்கப்படுமானால் ஏற்றுக்கொள்ளப்படும்.

*4*. **வேறு தகைமைகள்**.- இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளைக் கட்டாயமாக பூர்த்திசெய்தல் வேண்டும் :-

(அ) தேசிய இனம் :- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது :- 2019, சனவரி 15 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) உயரம் :- ஆண் 167.5 சென்றிமீட்டர் (5 அடி 6 அங்குலத்திற்கு) குறையாதிருத்தல் வேண்டும் ;

பெண் 162.5 சென்றிமீட்டர் (5 அடி 4 அங்குலத்திற்கு) குறையாதிருத்தல் வேண்டும்.

(ஈ) உடல் நிறை :- ஆண் $17 <$ உடற்பருமன் சுட்டி (BMI) $< 26$
பெண் $17 <$ உடற்பருமன் சுட்டி (BMI) $< 25$

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் (மீ)}^2}$$

(உ) மார்பு :- ஆண் 32" (குறைந்தது)

(ஊ) பார்வை வர்ணப்பதிவு மட்டம் :- CP2

(எ) தொலை பார்வை :- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(ஏ) குடியியல் நிலை :- விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலிளவல் எவரும் பயிற்சியின் போதும் ஆணைபெற்ற திகதியிலிருந்து ஓராண்டு காலத்துக்கும் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

5. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள சாதனைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

6. இரண்டாம் மூன்றாம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும்.

வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வைமட்டம் ஆகியவற்றிற்கு குறைவானவர்களும் உடற்தகைமை மட்டத்தை கொண்டிராதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள்.

7. தேவையான தகைமை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

8. **சேவை நிபந்தனைகள்.**- (அ) தேர்வுநாடி தொடக்கத்தில் ஏனைய பதவி வரிசைகளுக்குப் போன்ற அதே விதத்தில் வான்படையில் ஒரு பயிலிளவலாகச் சேர்க்கப்பட்டு அடிப்படை யுத்தப் பயிற்சியொன்றை மேற்கொள்வர். அடிப்படை பயிற்சி திருப்திகரமாக முடிவடைந்ததும் மற்றைய பயிற்சிக்கான காலப்பகுதி பயிலிளவல் சேவையின் கிளையைப் பொருத்து இருக்கும். பின் ஏனைய பதவி வரிசையிலான ஆட்சேர்ப்பு நீக்கப்பட்டு பைலட் ஒபிசர் பதவி வரிசையில் நிரந்தர ஆணையொன்றை பெறுவர்.

(ஆ) பயிலிளவல் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான்படை ஏவுநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

(இ) பயிலிளவல்களாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின் போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

(ஈ) ஒவ்வொரு பயிலிளவலுக்கும் அனைத்து வகை சீருடைகள், உபகரணங்கள், மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

(உ) பயிலிளவலின் பயிற்சிக் காலத்தின்போது பயிலிளவலுக்கு வான்படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்டு உணவும் வழங்கப்படும்.

(ஊ) ஒரு பயிலிளவல் பயிற்சியின்போது ஆணையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய பயிலிளவலின் பொருட்டு அதுகாலவரையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

(எ) ஒரு பயிலிளவல் தமது பயிற்சியின்போது எச்சமயத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கைக் குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவாரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின் சார்பில் வான்படை ஏவுநருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும்படியும் தேவைப்படுத்தப்படுவர்.

(ஏ) பெற்றோர் அல்லது பாதுகாவலர் உட்பந்திகள் ஊ, எ தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 28 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத்தேர்வுநாடிகள் பயிலிளவல்களாக நியமிக்கப்படுவதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப் படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(ஐ) பந்தி 2 இலும் 3 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வுநாடிகள் முதலாவது நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெறுபவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதுடன், (எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை வான்படையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச் சபைக்கு உட்படுத்தப்படுவர்.) தேவைப்படின் விமானத்தில் செல்லும் திறமையும் பரீட்சிக்கப்படும். அலுவலர் தரப்பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். குடும்ப நல பரீட்சையும் பின்னர் இறுதி நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். ஒவ்வொரு கிளைகளுக்கும் தேவைப்படும் தேர்வுநாடிகளின் எண்ணிக்கை அவரவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

(ஒ) திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

(ஓ) திருமணமாகிய அலுவலராயின் (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்.

(ஔ) எல்லா அலுவலரும் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப் படுவதற்கு ஆளாவர்.

(அஅ) எல்லா அலுவலரும் வான் படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

9. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.**- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

10. **சம்பளமும் கொடுப்பனவுகளும்**:-

(அ) தற்போதிலிருந்து 2020 வருடத்திற்கான ஏற்புடையதாக அடிப்படை சம்பள விகிதங்கள் பின்வருமாறு மேற்குறிப்பிட்டவாறு இலங்கை வான் படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு: 2018 இல் இருந்து கிடைக்கப்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. (ஆண்டொன்றுக்கு)

| வருடம் / நிலை | 2018 (வருடத் திற்கு) | திருத்தப்பட்ட கொடுப்பனவுகள் 2018 (வருடத்திற்கு) | 2020 (வருடத்திற்கு) |
|---|---|---|---|
| பயிலிளவல் | 308,184.00 | 36,960.00 | 388,560.00 |
| பைலட் ஒபிசர் (மாணவ நுழைவு) | 367,356.00 | 20,844.00 | 463,260.00 |
| பைலட் ஒபிசர் (மாணவ அல்லாத நுழைவு) | 398,796.00 | 12,444.00 | 502,860.00 |
| ப்ளையிங் ஒபிசர் | 452,916.00 | | 571,380.00 - (30 x 16,020) = 1,051,980.00 |
| ப்ளையிட் லெப்டினன்ட் | 529,164.00 | | 667,500.00 - (24x 16,020) = 1,051,980.00 |
| ஸ்குவாட்ரன் லீடர் | 579,996.00 | | 731,580.00 - (22 x 16,020) = 1,084,020.00 |

(ஆ) **ஏனைய கொடுப்பனவுகள்.**-

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800.

(2) உற்சாகமூட்டும் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் வழங்கப்படும்.

(3) கடினப்படி : மாதமொன்றுக்கு ரூபா 620.

(4) விசேட கொடுப்பனவு : யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு 4,380 ரூபா.

(5) விசேட கொடுப்பனவு 3,100 ரூபா (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதமும் கொடுப்பனவு வழங்கப்படும்.)

(6) இடைக்காலக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 1,000.

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு ரூபா 255).

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 19,113.36 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால் ஒவ்வொரு நாட்களுக்கும் ரூபா 616.56 வீதம்)

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(11) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும் துணைவிக்கும் பிள்ளைகளுக்கும்)

(12) உணவு விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு.

(13) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(14) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்).

(15) திருமணமான அலுவலருக்கு மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(16) பொதுக்கடமை விமான ஓட்டுநர் கிளையில் உள்ளவர்களுக்கு பறத்தல் சம்பளம் வழங்கப்படும்.

(17) பொறியியல் அதிகாரிகளுக்கான கொடுப்பனவு மாதாந்தம் ரூபா 15,000 (பொறியியல் அதிகாரிகளுக்கு மாத்திரம்)

(18) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் பைலற் ஆபீசர் இருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600 இலிருந்து ரூபா 4,250 வரை வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

11. **ஓய்வூதியங்கள்/பணிக்கொடைகள்.**- காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய அத்துடன் பணிக்கொடைகள் கோவையின் நியதிகளின்படி கொடுபடற்பாலனவாகும். எல்லா அலுவலர்களும் விதவைகள், அநாதைகள் (ஆயுதந் தாங்கிய படைகள்) ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துபவராவர். உதவுதொகை 1970 ஆம் ஆண்டின் விதவை, அநாதை (ஆயுதந் தாங்கிய படைகள்) ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளபடியானவாகும்.

12. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்.**- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரிப்படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2018, ஓகத்து 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, கட்டளை ஆட்சேர்ப்பு அலுவலகம், தொழிற்துறை பயிற்சிப் பாடசாலை, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பயிலிளவியல் ஆண்/பெண் அலுவலர்களுக்கான விண்ணப்பம் ............................ பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் தேதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/ குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) தேர்வுநாடி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது அல்லது அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும் போது பின்வருவனவற்றின் மூலப்பிரதிகளை மற்றும் பிரதிகளை காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப் பிரதி மற்றும் பிரதி (கல்விச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(2) தேசிய அடையாள அட்டை மூலப் பிரதி மற்றும் பிரதி;

(3) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ். மூலப் பிரதி மற்றும் பிரதி ;

(4) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்/தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்) மூலப் பிரதி மற்றும் பிரதி ;

(5) இரு குணநலச் சான்றிதழ்கள். (ஆறு மாதத்திற்கு உட்பட்ட) இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்வி கற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பதாரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில் தருநரினதாக இருத்தல் வேண்டும் ;

(6) விளையாட்டுத்துறைகள், பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள். மூலப் பிரதி மற்றும் பிரதி ;

(7) வெற்று பயில் கவர் மற்றும் பயில் டேக்;

(8) வர்ண புகைப்படம் 2 × 2 1/2 அங்குல அளவு கிராம அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்டது.

(ஈ) ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கெடுக்கப்படமாட்டா.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

13. விண்ணபத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

14. **தேர்ந்தெடுத்தல், நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேற் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் தேர்வுநாடிகளிலிருந்து ஆரம்ப தெரிவுகள் செய்யப்படும். ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்படும் தேர்வுநாடிகள் வான்படை ஏவுநரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்படி தேவைப்படுத்தப்படுவார்கள். இதிலிருந்து தெரிவு செய்யப்படும் தேர்வுநாடிகள் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படும் தெரிவுச் சபை ஒன்றினாலான நேர்முகப் பரீட்சையின் பின்னர் இறுதித் தெரிவு நடைபெறும்.

(ஆ) நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டா.

(இ) விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

(ஈ) நேர்முகப் பரீட்சைகளைத் தொடர்ந்து எழுத்துப் பரீட்சை அல்லது செயன்முறை பரீட்சை மற்றும் அதிகாரி தர நிர்ணய பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(உ) இறுதி நேர்முகப் பரீட்சைக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

(ஊ) ஒரு தேர்வுநாடியைச் சிபாரிசு செய்ய விரும்புவதாயின் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(எ) சேர்த்துக்கொள்வதற்குப் பொருத்தமற்றவராகக் காணப்படும் தேர்வுநாடிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டா.

கே. வி. பி. ஜயம்பதி,
WWV, RWP, RSP and three Bars, VSV, USP,
MMSc (Strat Stu-China), fndu (China),qhi,
எயார் மார்ஷல்,
வான்படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான் படை,
த. பெ. இல. 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர வான்படையில் ........................... பிரிவில் ஆண்/பெண் பயிலிளவல் அலுவலருக்கான விண்ணப்பம்**

1. தேசிய இனம் :----.

   (இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா ? பதிவுமுறையாயின், சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

2. முழுப்பெயர் (தேசிய ஆள் அடையாள அட்டையிலுள்ளபடி) : ----.
3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
4. நிரந்தர முகவரி :----.
5. தற்போதைய அஞ்சல் முகவரி :----.
6. பிறந்த திகதி :----.

   வயது (2019, சனவரி 15 ஆந் திகதிக்கு) :-

   வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
7. உயரம் : ---- செ. மீ. (----அடி, ---- அங்குலம்.)
8. நிரந்தர முகவரிக்கு அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :----.
9. மாவட்டம் :----.
10. தேர்தற் தொகுதி :----.
11. கிராம அலுவலர் பிரிவு :----.
12. தொலைபேசி இலக்கம் :----.
13. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.
14. பால் :----.
15. பாடசாலை பற்றிய விபரங்கள் :----.
16. பாடசாலை அத்துடன்/அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :----.

| பாடசாலை/பல்கலைக் கழகத்தின் பெயர்கள் | பரீட்சையின் தன்மை | ஆண்டு | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக உறுதிப்படுத்தல் | | |

17. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

18. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

19. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

20. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

21. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

22. இதற்கு முன் ஆயுதப் படையில், தொண்டர் படையில், பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

23. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தாரா ? அவ்வாறாயின், விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

24. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின், விபரங்கள் தருக :----.

25. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

26. நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |
| | | |

27. விண்ணப்பதாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை :

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படைக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

28. விண்ணப்பதாரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடவேண்டிய வெளிப்படுத்துகை :

(அ) இலங்கை வான்படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 27 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் ....................................... இவருக்கு நான், பெற்றோர்/ பாதுகாவலர் ஆவேன்.

(ஆ) மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொறுப் பாளியாவேன் :-

(1) பயிற்சியின்போது ஆணைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு திருப்பிக் கொடுப்பதற்கும்,

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாட்டுக் காரணங்களுக்காக ஆணை வழங்கப்படுவதற்குத் தகுதியற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு திருப்பிச் செலுத்துவதற்கும் உடன்படுகிறேன்.

----,
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

----,
முதலாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

----,
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

8-786

---

## இலங்கை வான்படை

அரசாணையமர்வு அலுவலர் வெற்றிடங்கள்

1. இலங்கை நிரந்தர /தொண்டர் வான்படையில் ஆண் /பெண் நேரடி அரசாணையமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் கீழ்க் காணும் பிரிவுகளில் உள்ளன:-

அ. தொழில்நுட்ப பொறியியல் பிரிவு (ஆண்)

ஆ. வைத்தியப் பிரிவு (ஆண்/பெண்)

இ. பல்வைத்தியப் பிரிவு (ஆண்/பெண்)

ஈ. பரிபாலன விவசாயப் பிரிவு (ஆண்)

உ. பரிபாலன கல்விப் பிரிவு (ஆண்)

ஊ. பரிபாலன இசைப் பிரிவு (ஆண்)

2. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படை கல்வித்தகைமை**

(அ) குறைந்த பட்சம் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும் சிங்களம் /தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். (மேலதிக மற்றும் கட்டாயமற்ற பாடங்கள்) ;

(ஆ) குறைந்தபட்சம் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் எந்த பிரிவிலாவது ஒரே அமர்வில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்;

(இ) Pearson / Edexcel /சர்வதேச சாதாரண /உயர் தர மற்றும் GCSE, GCE கேம்பிரிட்ஜ் பரீட்சை பெறுபேறுகள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் பெறுபேறுகள் அதற்கு சமனான தகைமை என தங்களால் நிரூபிக்கப்படுமானால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தொழிற்துறை தகைமை /கல்வித்தகைமை**

(அ) ***தொழில்நுட்ப பொறியியல் பிரிவு :***

(1) ***இரசாயன பொறியியல் அதிகாரி (ஆண்) தொண்டர் :***

* பௌதிக விஞ்ஞானத்தில் Bsc பட்டச் சான்றிதழ் இருத்தல் வேண்டும். மற்றும் வருட surface treatment தொடர்பாக 05 வருட அனுபவம் இருத்தல் அல்லது சமமான தகைமைகள் குறிப்பிட்ட துறையில் இருத்தல் வேண்டும்.

(ஆ) ***வைத்தியப் பிரிவு***

(1) ***வைத்திய அதிகாரி ஆண் (தொண்டர்)*** :

* ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற MBBS பட்டம் அல்லது வைத்தியபட்டம் அதற்கு சமமான தகைமைகளுடன் இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

(2) ***வைத்திய மாணவர் ஆண் /பெண் ( நிரந்தர)*** :

* ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் மூன்றாம் வருட MBBS (பகுதி I) (பகுதி II) முடித்திருத்தல் வேண்டும்.

(2) ***பயிற்சி பெறும் (Pre-Intern) வைத்தியர் - ஆண் /பெண் ( நிரந்தர)***

* MBBS மூன்றாம் வருட நிறைவு மாணவர்கள் மற்றும் MBBS பட்டம் அல்லது அதற்கு சமமான தகைமைகளுடன் இலங்கை வைத்திய சபையினால் அனுமதிக்கப்பட்ட மாகாண ரீதியான பதிவுடன் அல்லது பதிவு அல்லாமல் வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற (Sri Lanka) அல்லது அதற்குச் சமமான பட்டம். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 03 ஆண்டு சேவை காலத்திற்குள் ERPM பரீட்சையில் சித்தி பெற்று இலங்கை வைத்திய சபையில் அங்கீகாரம் பெறல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு இயலாத விண்ணப்பதாரிகள் (3) வருட சேவைக்குப்பின் நிறுத்தப்படுவார்கள்.

(இ) ***பல் வைத்தியப் பிரிவு***

(1) ***பல் அறுவை மருத்துவர் - ஆண் /பெண் (நிரந்தர)*** :

BDS அல்லது அதற்கு சமனான தகைமையுடன் SLMC அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) ***பயிற்சி பெறும் (Pre-Intern) வைத்தியர் - ஆண் /பெண் (நிரந்தர)*** :

* BDS அல்லது இலங்கை வைத்திய சபையினால் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற BDS (Sri Lanka) அல்லது அதற்குச் சமமான பட்டம். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 05 ஆண்டு சேவை காலத்திற்குள் ERPM பரீட்சையில் சித்தி பெற்று இலங்கை வைத்திய சபையில் அங்கீகாரம் பெறல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு இயலாத விண்ணப்பதாரிகள் (5) வருட சேவைக்குபின் நிறுத்தப்படுவார்கள்.

***(ஈ) பரிபாலன கல்விப் பிரிவு***

***(1)** ஆங்கில மொழி விரிவுரையாளர் - ஆண் /பெண் (நிரந்தர் /தொண்டர்)*

தேசிய கல்வியற் கல்லூரியில் ஆங்கில மொழி தொடர்பான 3 வருட கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தியாகியிருத்தல் அல்லது தேசிய கல்வித் திணைக்களத்தில் ஆசிரியர் கலா சாலையில் 2 வருட ஆங்கில மொழி தொடர்பான கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தியாகியிருத்தல் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைகழகத்தால் ஆங்கிலத்தில் BA / BSc பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கிலம் ஒரு பாடமாக MA/ Msc பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கில மொழி மூலம் MA/ Msc பட்டம் பெற்றிருத்தலுடன் ஆங்கில மொழி ஆசிரியராக ஒரு வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும். அல்லது ஆங்கிலம் ஒரு பாடமாக BA / BSc பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கிலத்தில் B.Ed அல்லது ஆங்கில மொழி மூலம் BA / BSc பட்டம் பெற்றிருத்தலுடன் ஆங்கில மொழி ஆசிரியராக ஒரு வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.

***(உ) பரிபாலன கால்நடை வைத்தியப் பிரிவு***

*கால்நடை வைத்தியர் ஆண் (நிரந்தர /தொண்டர்)*

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற 4 வருட மிருக வைத்தியராக BVSc பட்டம் பெற்றிருத்தல் அல்லது அதற்கு சமமான இலங்கை பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் இருத்தல் வேண்டும்.

***(ஊ) பரிபாலன இசை பிரிவு***

*(1) இசைக் கலைஞர் மேலைத்தேய (Military Band/Beat Group/ Rock Band) ஆண் (நிரந்தர /தொண்டர்)*

கலை பிரிவில் பட்டம் இருத்தல் வேண்டும் அல்லது டிப்ளோமா மேலைத்தேய இசையில் அல்லது வெளிவாரி டிப்ளோமா மேலைத்தேய இசையில் அல்லது றோயல் கல்லூரியில் அல்லது திரின்ரி கல்லூரியில் தரம் 8 வரை அல்லது அதற்கு மேலும் லண்டன் அல்லது அதற்கு சமனான தகைமை இருத்தல் வேண்டும்.

**3. அனுபவம்.-**
குறிப்பிட்ட துறையில் தொழிற் தகைமை மற்றும் குறிப்பிட்ட துறையில் 2 வருடங்கள் அனுபவம் இருத்தல் நேர்முகப் பரீட்சையின் போது மேலதிக தகைமையாக கருதப்படும்.

**4. வேறு தகைமைகள்**

| | | |
|---|---|---|
| அ. தேசிய இனம் | :- | ஓர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும். |
| ஆ. குடியியல் நிலை | :- | விவாகமானவர் /விவாகமாகாதவர் |
| இ. பால் | :- | ஆண் /பெண் (தேவையை பொருத்து) |
| ஈ. வயது | :- | 2019, சனவரி 15 ஆந் திகதிக்கு 18-33 வரை இருத்தல் வேண்டும் |
| உ. உயரம் | :- | ஆண்கள்-167.5 செ. மீ. (5 அடி 6 அங்குலமும் அதற்கு மேலும்.)<br>வைத்திய /பல் வைத்தியப் பிரிவு :<br>ஆண்கள்-165 செ. மீ. (5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும்.)<br><br>பெண்கள்- 162.5 செ. மீ. (5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும் )<br>வைத்திய /பல் வைத்தியப் பிரிவு :<br>பெண்கள்- 160 செ. மீ. (5 அடி 3 அங்குலமும் அதற்கு மேலும் ) |
| ஊ. நிறை | :- | (ஆண்) 17 < உடற்பருமன் சுட்டி < 26<br>(பெண்) 17 < உடற்பருமன் சுட்டி < 25 |
| | :- | உடற்பருமன் சுட்டி (BMI) = நிறை (கி . க) / உயரம் $^2$(மீ) |
| எ. மார்பு | :- | ஆண் 32" (குறைந்தது) |

ஏ. பார்வை வர்ணப்பதிவு மட்டம் :- CP2

ஐ. தொலை பார்வை :- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்) (தொழில்நுட்ப மற்றும் தொழிற்பாடுகள் மாத்திரம் இரண்டு கண்களிலும் 6/18 மூக்குக் கண்ணாடி பயன்படுத்தியும் 6/6 இருத்தல் வேண்டும்)

**5. விஷேட குறிப்பு**

(1) இரண்டாம் மூன்றாம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத தேர்வு நாடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை மட்டம் ஆகியவற்றிற்கு குறைவானவர்களும் உடற் தகைமை மட்டத்தை கொண்டிராதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். தேவையான உயரம் இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

(2) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பிளைட் லெப்டினன்ட் அல்லது ப்ளையின் ஒப்பிசர் மற்றும் பைலட் ஒப்பிசர் நிலையில் அலுவலராக அவர்களின் தொழிற் தகைமை, சேவை அனுபவத்திற்கு அமைவாக வான்படை தளபதியால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(3) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் எழுத்து, செயன்முறை மற்றும் அதிகாரி தர நிர்ணய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர் .

(4) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் இலங்கை வான்படை மருத்துவ பரீட்சைக்கு உட்படுத்தப் படுவர். வான்படை ஆளுனரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

(5) அனைத்து பட்டங்களும் டிப்ளோமாக்களும் இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்டவையாக இருத்தல் வேண்டும்.

(6) தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

(7) விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

(8) அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

(9) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை தளபதியால் தீர்மானிக்கப்படும் காலங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப்படுவார்கள். பயிற்சி காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

(10) இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27ஆந் திகதிய 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உபசேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு பைலற் ஆபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணை பெற்ற பதவி வழங்கப்படும். வான்

படைச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் நியதிகளின்படி 'அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்.' ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான் படைச்சட்டத்தின் 11ஆம் பிரிவின் படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப்படலாம். பயிற்சி மற்றும் அதைத் தெடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டா. வான் படையிலிருந்து ஓய்வுபெறுவது வான்படை ஓய்வூதியங்கள் பணிக்கொடைகள் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

(11) வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

(12) அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப் படுவதற்கு ஆளாவர்.

(13) திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும் . சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

(14) திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15(ஈ) (16) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

**6. சம்பளமும் கொடுப்பனவுகளும்**

அ. தற்போதிலிருந்து 2020 வருடத்திற்கான ஏற்புடையதான அடிப்படை சம்பள விகிதங்கள் பின்வருமாறு.- மேற்குறிப்பிட்டவாறு இலங்கை வான் படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு. 2018 இல் இருந்து கிடைக்கப்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது (ஆண்டொன்றுக்கு) :-

| வருடம் / நிலை | 2018 (வருடத் திற்கு) | திருத்தப்பட்ட கொடுப் பனவுகள் (வருடத்திற்கு) | 2020 (வருடத்திற்கு) |
|---|---|---|---|
| பயிலிவியல் | 367,356.00 | 20,844.00 | 463,260.00 |
| பைலட் ஒபிசர் (மாணவ நுளைவு) | 398,796.00 | 12,444.00 | 502,860.00 |
| பைலட்ஒபிசர் (மாணவ அல்லாத நுளைவு) | 452,916.00 | | 571,380.00- (30X16,020) = 1,051,980.00 |
| ப்ளையின் ஒபிசர் | 529,164.00 | | 667,500.00 - (24X16,020) = 1,051,980.00 |
| ப்ளைற் லெப்டினன்ட் | 579,996.00 | | 731,580.00 - (22X16,020) = 1,084,020.00 |
| ஸ்குவாட்ரன் லீடர் | 595,524.00 | | 751,140.00 - (17X19,560) = 1,083,660.00 |

ஆ. வைத்திய அதிகாரிகளுக்கான சம்பள கொடுப்பனவு :

| வருடம் / நிலை | 2018 (வருடத்திற்கு) | திருத்தப்பட்ட கொடுப் பனவுகள் (வருடத்திற்கு) | 2020 (வருடத்திற்கு) |
|---|---|---|---|
| ஆரம்ப பிரிவு | 516,456.00 | - | 651,780.00 (3X16,020-7X16140-2X19,560- 16 X 26,040) |
| தரம் II | 554,652.00 | - | 699,660.00 (3X16,020-7X16140-2X19,560- 16 X 26,040) |
| தரம் I | 681,852.00 | - | 861,660.00 (3X16,020-7X16140-2X19,560- 16 X 26,040) |
| விஷேட பிரிவு | 837,072.00 | - | 1,056,000.00 (12 X 32,400) |

இ. பல்வைத்திய அதிகாரிகளுக்கான சம்பள கொடுப்பனவு

| வருடம் / நிலை | 2018 (வருடத்திற்கு) | 2020 (வருடத்திற்கு) |
|---|---|---|
| தரம் II | 503,748.00 | 635,460.00 (3X16,020-7X16,140-2X19,560- 16X 26,040) |
| தரம் I | 681,852.00 | 861,660.00 (3X16,020-7X16,140-2X19,560- 16X 26,040) |
| விஷேட பிரிவு | 837,072.00 | 1,056,000.00 (12X 32,400) |

ஈ. வைத்திய, பல் வைத்திய அதிகாரிகளுக்கான வேறு கொடுப்பனவுகள்:-

(1) ஓய்வூதிய கொடுப்பனவு மாதமொன்றுக்கு
- ஆரம்ப பிரிவு - ரூபா 1,700.00
- தரம் II - ரூபா 1,700.00
- தரம் I - ரூபா 3,400.00
- விஷேட பிரிவு - ரூபா 3,400.00

(2) ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு மாதமொன்றுக்கு
- ஆரம்ப பிரிவு - ரூபா 2,125.00
- தரம் II - ரூபா 1,700.00
- தரம் I - ரூபா 400.00

(3) நட்ட கொடுப்பனவு மாதமொன்றுக்கு- ரூபா. 35,000.00

(4) மேலதிக வேலை கொடுப்பனவு மணித்தியாலத்திற்கு
- ஆரம்ப பிரிவு - ரூபா 545.00
- தரம் II - ரூபா 631.00
- தரம் I - ரூபா 872.00
- விஷேட பிரிவு - ரூபா 1,035.00

(5) மொழித்திறமை கொடுப்பனவு மணித்தியாலத்திற்கு
- ஆரம்ப பிரிவு - ரூபா. 1209.00
- தரம் II - ரூபா. 1217.00
- தரம் I - ரூபா. 1872.00
- விஷேட பிரிவு - ரூபா. 2294.00

(6) தேவையை பொருத்து பந்தி 15 (ஈ) உள்ள சேவை கொடுப்பனவு வழங்கப்படும்.

உ *சேவைக் கொடுப்பனவுகள் :*

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா. 7,800.00

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250.00 வீதம் வழங்கப்படும்.

(3) கடினப்படி: மாதமொன்றுக்கு 620.00 வீதம். ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 20.00 வீதம்

(4) விஷேட கொடுப்பனவு: யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,380.00

(5) விஷேட கொடுப்பனவு: ரூபா 3,100.00 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100.00 வீதம்)

(6) மேலதிக கொடுப்பனவு: மாதமொன்றுக்கு ரூபா 1,000.00.

(7) சீருடை பேணுதல் படி: மாதமொன்றுக்கு ரூபா 255.00.

(8) சேவையாளர் படி: மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(9) உணவுப்படி: மாதமொன்றுக்கு ரூபா 19,113.36 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால் ஒவ்வொரு நாளுக்கும் ரூபா 559.66 வீதம்)

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(11) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப் பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும், பிள்ளைகளுக்கும்)

(12) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய் வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணச் செலவு மீளளிப்பு.

(13) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(14) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்).

(15) திருமணமான அலுவலருக்கு(வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ.போ.ச இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(16) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலற் ஒபீசர் இருந்து குறுப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600.00 இருந்து 4,250.00 வரை) வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

(17) சேவைக் கொடுப்பனவு ரூபா 300.00 ரூபா 400.00 ரூபா 500.00 (பல் வைத்தியர்களுக்கு முடிவுற்ற சேவைக் காலத்தைப் பொருத்து).

(18) மேலதிக கொடுப்பனவு ரூபா 1,500.00 (வைத்திய, பல்வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(19) 1/20 கொடுப்பனவு மாதமொன்றுக்கு - அடிப்படை சம்பளம் x 1/20 x 3 நாட்கள் மட்டும். (வைத்திய, பல்வைத்தியர்களுக்கு மாத்திரம்)

(20) மேலதிக கொடுப்பனவு 120 மணி ஒரு மாதத்திற்கு (வைத்திய, பல்வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(21) தொலை பேசிக் கொடுப்பனவு மாதாந்தம் - விஷேட வைத்தியர் ரூபா 8,000.00
வைத்தியர் ரூபா 4,000.00

7. ஓய்வூதியங்கள் / பணிக்கொடுப்னவு என்பன காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படுமாகும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின் படியாகும்.

8. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் -**

அ. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் **2018, ஓகத்து 31** ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "**பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, பிரதான ஆட்சேர்ப்பு அலுவலகம், தொழிற்துறை பாடசாலை, இலங்கைப் படை, ஏக்கல, கொட்டுகொட**" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசாணையமர்வு அலுவலர் விண்ணப்பம்.................... பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் தேதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

ஆ. அரசாங்க சேவையில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின் / குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதி மற்றும் பிரதிகளை நேர்முக பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும் .

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப் பிரதி மற்றும் பிரதி (கல்விச் சட்டக்கோவையின் நோக்கத்திக்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(2) தேசிய அடையாள அட்டை மூலப் பிரதி மற்றும் பிரதி;

(3) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ், மூலப் பிரதி மற்றும் பிரதி

(4) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில் / தொழில்நுட்பப் பயிற்சி அத்துடன் / அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்) மூலப் பிரதி மற்றும் பிரதி.

(5) இரு குணநலச் சான்றிதழ்கள். (ஆறு மாதத்திற்கு உட்பட்ட) இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்வி கற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பக்காரரை அறிந்துள்ளவரான பொறுப்பு வாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில் தருநரினதாக இருத்தல் வேண்டும்.

(6) விளையாட்டுத்துறைகள் பயிலினவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள், மூலப் பிரதி மற்றும் பிரதி

(7) வெற்று பயில் கவர் மற்றும் பயில் டேக்

(8) கிராம அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்ட வர்ண புகைப்படம் 2 x 2½ அங்குல அளவு

ஈ. ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வு நாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டா .

உ. ஆவணங்களோ ஆவனங்களின் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

ஊ. விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

9. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவு செய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பக்காரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

10. **தெரிவு செய்தல் நேர்முகப் பரீட்சை முதலியன :**

அ. மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனையை பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற்கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவு சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும்.

ஆ. நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதியாக தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டாது.

இ. விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

ஈ. இறுதி நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

உ. ஒரு தேர்வுநாடியைச் சிபாரிசு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

ஊ. நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

கே. வி. பி. ஜயம்பதி ,
WWV, RWP, RSP and three Bars, VSV, USP,
MMSc.(Stratstu-China), fndu (China), qhi,
எயர் மார்ஷல்,
வான் படைத் தளபதி.

தலைமையகம்,
இலங்கை வான் படை,
த.பெ.எண். 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர /தொண்டர் வான்படையில் . . . . . . . . . பிரிவு**

1. தேசிய இனம் :----.
(இலங்கைச் பிரசையாயின் வம்சாவளியிலா அல்லது பதிவு முறையிலா? பதிவு முறையாயின், சான்றிதழின் இலக்கமும் தேதியும் குறிப்பிடுக).
2. முழுப்பெயர் (தேசிய ஆள் அடையாள அட்டையில் உள்ளவாறு) :----.
3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
4. விண்ணப்பிக்கும் துறை :----.
5. விண்ணப்பிக்கும் பிரிவு :----.
6. நிரந்தர முகவரி :----.
7. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் :----.
8. பாடசாலை பற்றிய விபரங்கள் :----.
9. அஞ்சல் முகவரி :----.
10. E-Mail முகவரி :----.

11. பிறந்த திகதி :-
வருடம்.........., மாதம்.........., நாள்.......... .
(2019, சனவரி 15 ஆந் திகதியன்று) வயது :
வருடங்கள்.......... மாதங்கள்.......... நாட்கள்..........

12. உயரம் : சென்றி மீற்றர் (............. அடி ........... அங்குலம்)

13. மாவட்டம் :----.

14. தேர்தற் தொகுதி :----.

15. கிராம அலுவலர் பிரிவு :----.

16. தொலைபேசி இலக்கம் :----.

17. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா? :----.

18. பாடசாலை அத்துடன் / அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள்:

| பாடசாலை / சர்வகலா சாலை பெயர்கள் | பரீட்சை | ஆண்டு | பொதுப் பாடசாலைகளும் சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>தொழில் தகைமைகள் வேறு | | |

19. பாடசாலை / பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப்பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

20. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

21. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

22. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் தேதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

23. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (தேதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

24. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

25. இலங்கை வான் படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிசில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தாரா ? அவ்வாறாயின், விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக.

26. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின், விபரங்கள் தருக :----.

27. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில், கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி /தேசிய வங்கி /பல்கலைக்கழகங்கள் /அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :

28. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் -

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

29. விண்ணப்பகாரர் கைச்சாத்திட வேண்டிய வெளிப்படுத்துகை :

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் ஏற்ப சரியானவை என என் மீது ஆணையாக உறுதிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

-----,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :----.

8-787

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வானொலி அரச விருது வழங்கல் விழா - 2019

இலங்கையில் மின்னியல் தகவல் தொடர்பாடலான வானொலிக்கு ஒன்பது தசாப்த காலமான வரலாறொன்று காணப்படுகின்றது. அதில் ஊடகத்துறையில் சேவையாற்றுவோரை அரச மட்டத்தில் பாராட்டி கௌரவிக்கும் நோக்குடன் உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலைக் குழு மற்றும் அரச வானொலி ஆலோசனைச் சபை ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்படும் "**வானொலி அரச விருது வழங்கல் விழா-2019**" இம்முறை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும் வகையில் நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விருது விழா தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள சகல வானொலி அலைவரிசைகளுக்கும் பொதுவானது. வானொலிக்காக (அரச, தனியார்) பெரும் பணியில் சகல படைப்பாளர்களையும் கௌரவிப்பதற்காக இவ்விழா ஏற்பாடு செய்யப்படுகின்றது.

**போட்டிப் பிரிவுகள்**

**01. செய்தி மற்றும் சமகாலப் பிரிவு**

1.1 சிறந்த செய்தி ஆசிரியர்
1.2 சிறந்த செய்தி வாசிப்பாளர் (ஆண்)
1.3 சிறந்த செய்தி வாசிப்பாளர் (பெண்)
1.4 சிறந்த ஆராய்ச்சிபூர்வமான செய்தி அறிக்கை

**02. நானாவித நிகழ்ச்சி மாதிரிகள்**

2.1 சிறந்த விவரண நிகழ்ச்சி
2.2 சிறந்த ஆவணப்படுத்தல் நிகழ்ச்சி
2.3 சிறந்த சஞ்சிகை நிகழ்ச்சி
2.4 சிறந்த கலந்துரையாடல் நிகழ்ச்சி
2.5 சிறந்த வினா விடை நிகழ்ச்சி

(கல்வி, சமயம், சிறுவர், பெண்கள், சுகாதாரம், விளையாட்டு, சுற்றாடல், தேசிய ஒற்றுமை, கலாசார மற்றும் கலை தொனிப்பொருளைக் கொண்ட நிகழ்ச்சிகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும்.)

**03. வானொலி நாடகம்**

3.1 சிறந்த வானொலி நாடகப் பிரதியாளர்
3.2 சிறந்த வானொலி நாடக நடிகர்
3.3 சிறந்த வானொலி நாடக நடிகை
3.4 சிறந்த வானொலி நாடகத் தயாரிப்பு
3.5 சிறந்த வானொலி சிறுவர் நாடகப் பிரதியாளர்
3.6 சிறந்த வானொலி சிறுவர் நாடக நடிகர்
3.7 சிறந்த வானொலி சிறுவர் நாடக நடிகை
3.8 சிறந்த வானொலி சிறுவர் நாடகத் தயாரிப்பு

**04. ஏனைய விருதுகள்**

4.1 சிறந்த உரைஞர்
4.2 சிறந்த அறிவிப்பாளர் (ஆண்)
4.3 சிறந்த அறிவிப்பாளர் (பெண்)
4.4 சிறந்த ஒலி அமைப்பு
4.5 சிறந்த ஆரம்பு விளம்பர குறியிசை (Jingle)
4.6 சிறந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர்
4.7 சிறந்த வானொலி அலைவரிசை
4.8 சிறந்த வானொலி நேர்முக வர்ணனையாளர்

- **பிரதிபா பிரணாம விருது**

(இலங்கை வானொலி ஊடகத்தின் வளர்ச்சிக்காக அதி சிறந்த பணியாற்றிய, ஆற்றியிருக்கும் தலைசிறந்த வானொலிக் கலைஞர்கள் மூவருக்கு மூன்று பிரதிபா பிரணாம விருதுகள் வழங்கப்படும்.)

போட்டி நிபந்தனைகள் மற்றும் உரிய விபரங்கள் அடங்கிய பத்திரம்

(விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்கு முன் வாசித்துப் பார்க்கவும்)

**01. பொதுவான அறிவுறுத்தல்கள்**

1.1 2017/2018 ஆம் வருட வானொலி நிகழ்ச்சிகள்/படைப்புகளுக்கான வானொலி அரச விருது விழா 2019, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி நடைபெறும்.

1.2 இலங்கையில் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்ட வானொலி நிகழ்ச்சிகளை மாத்திரம் போட்டிக்காக சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

1.3 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி கால எல்லைக்குள் ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகள் மாத்திரம் போட்டிக்கு உரியதாகும்.

1.4 அனைத்து போட்டிகளுக்கும் விண்ணப்பிப்பதற்கு குறித்த விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் பாவிக்கவும்.

1.5 விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 01, 02, 03, 04, 05, 06 மற்றும் 07 ஆகியன விண்ணப்பதாரியினால் நிரப்பப்படுதல் வேண்டும் என்பதுடன், இலக்கம் 08 தமது நிறுவனத்தில் தலைலர்/பிரதிநிதி ஒருவரின் அனுமதியுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.6 இலக்கம் 09 வானொலி நிலையம் (அரச சார்பற்ற) வெளியக முகவர் /தயாரிப்பு நிறுவனம் /தனிப்பட்டவர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.

**02. விருதுகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பான தெரிவுகள்**

2.1 விருதுகள் குறிப்பிடப்பட்டுள்ள போட்டிப்பிரிவுகளுக்கு மாத்திரமே வழங்கப்படும்.

2.2 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் விருது வழங்கல் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படும்.

2.3 பிரதான விருதுகளுக்கு மேலதிகமாக ஆக்கப்பூர்வமான நிகழ்ச்சிகள் தொடர்பாக நடுவர்களின் விசேட விருதுகள் மற்றும் சிறப்புத் திறமை விருதுகள் வழங்குவதற்கும் கவனத்தில் கொள்ளப்படும்.

**03. விண்ணப்பித்தல்**

3.1 ஒரு நிறுவனத்திற்கு ஒரு பிரிவில் (Category) 05க்கு மேற்படாத நிகழ்ச்சிகள் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும் (நிறுவனம் மூலம் தெரிவு செய்து சமர்ப்பிப்பது வரவேற்கப்படும்).

(உ.ம். – கலாசார நிகழ்ச்சிகள் எனில் ஆகக் கூடியது 05 நிகழ்ச்சிகள்)

3.2 வானொலி அலைவரிசைகளில் சேவையில் ஈடுபட்டிருக்கும் படைப்பாளர்களுக்கும் தொடர்புப்பட்ட நிறு வனத்தின் பரிந்துரையோடு சமர்ப்பிக்க முடியும்.

3.3 ஒவ்வொரு பிரிவுகள் தொடர்பாக வெவ்வேறாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**04. சமர்ப்பித்தல்**

4.1 தங்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களுடன் குறித்த நிகழ்ச்சி அடங்கிய இறுவெட்டு (CD) கையளிக்கப்படல் வேண்டும்.

4.2 படைப்புக்கள் வார நாட்களில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும்.

4.3 தங்களின் அனைத்து படைப்புகளும்–

பணிப்பாளர்,
கலாசார அலுவல்கள் திணைக்களம்,
8 ஆம் மாடி,
"செத்திறிபாய",
பத்தரமுல்லை.

என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுக் தபால் மூலமோ உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (தொடர்புகளுக்கு 0112-882551, 0112-872031)

05. **பொதுவான நிபந்தனைகள்**

5.1 விண்ணப்பங்கள் தபால் மூலம் பெற்றுக்கொள்வதற்காக முத்திரை ஒட்டப்பட்டு முகவரி எழுதப்பட்ட 4.3 அளவிலான தபால் உறை அனுப்ப வேண்டும். (சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் / இறுவெட்டுக்கள் (CD) மீள வழங்கப்படமாட்டாது)

5.2 www.culturaldept.gov.lk இணையத்தள முகவரியின் மூலமும் விண்ணப்பப்படிவங்களை தரவிறக்கம் செய்துக்கொள்ள முடியும்.

5.3 தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "வானொலி அரச விருது வழங்கல் விழா – 2019" எனக் குறிப்பிடல் வேண்டும்.

5.4 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2018, செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதியாகும். (உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

5.5 படைப்பாளர்கள் குறிப்பிடப்பட்ட விதிமுறைகள் மற்றும் போட்டிக்கான நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டியதோடு நடுவர்களின் முடிவு இறுதி முடிவாக வெளியிடப்படும்.

அனூஷா கோகுல பர்னாந்து,
பணிப்பாளர்,
கலாசார அலுவல்கள் திணைக்களம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கலாசார அலுவல்கள் திணைக்களம்**

**வானொலி அரச விருது வழங்கல் விழா - 2019**

| | |
|---|---|
| அலுவலக உபயோகத்திற்கு | |
| விண்ணப்பப்படிவ இல. | |

1. விண்ணப்பிக்கும் வானொலி நிறுவனம் :----.

1.1 சுருக்கப் பெயர் :----. (உதாரணம் : SLBC)

1.2 முகவரி :----.

1.3 நிரந்தர தொலைபேசி இலக்கம் :----.

1.4 தொலைநகல் :----.

1.5 மின்னஞ்சல் :----.

1.6 இணையத்தளம் :----.

2. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :----.

2.1 தொழில் முகவரி :----.

2.2 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :----.

3. விண்ணப்பிக்கும் பிரிவின் பெயர் :----.
(தகவல் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டவாறு /உ+ம்: வானொலி நாடகம், நாடகப் பிரதி)

3.1 விண்ணப்பிக்கும் பிரிவின் இலக்கம் :----.

3.2 நிகழ்ச்சியின் பெயர் :----.

3.3 ஒலிபரப்பப்பட்ட திகதி மற்றும் நேரம் :----/----.

3.4 நிகழ்ச்சியின் காலம் (Duration) : மணி : ☐ நிமிடம் : ☐ விநாடி : ☐

4. பங்களிப்பு

4.1 தயாரிப்பு :----.

4.2 பிரதியாக்கம் :----.

4.3 தொகுப்பாளர் /நிகழ்ச்சித் தொகுப்பாளர் /வர்ணனையாளர் /வேறு :----.

4.4 இசை :----.

4.5 ஒலி அமைப்பு /ஒலித் தொகுப்பு :----.

4.6 ஒலிச் சேர்க்கை (Dubbing) /குரல் ஒலி (Vocal Sound) :

I. ……………………………………………………………………

II. ……………………………………………………………………

III. ……………………………………………………………………

IV. …………………………………………………………………..

V. ……………………………………………………………………

VI. …………………………………………………………………..

VII. ……………………………………………………………………

நேரடியாக (Live) ஒலிபரப்புச் செய்யப்பட்டதா? அல்லது பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பப்பட்டதா?:----.

5. நிகழ்ச்சியின் நோக்கம் :----.

6. நிகழ்ச்சிக்கு (ஆக்கத்திற்கு) உரியதாக பொறுப்பளிக்கப்படுகின்ற CDக்களின் எண்ணிக்கை …

(CD தொழில்நுட்பத்தால் மாத்திரம் ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.) தயாரிப்பின் பெயர், தயாரிப்பாளரின் பெயர், இலக்கம் மற்றும் வகை ஆகியவற்றை தெளிவாகக் குறிப்பிடுக.

7. **விண்ணப்பதாரியின் கூற்று** :-

……………………………………………… ஆகிய நான், வானொலி அரச விருது வழங்கல் விழா 2019 இன் போட்டி நிபந்தனைகளுக்கு இணங்குவதாகவும், நடுவர்குழுவின் முடிவு இறுதி முடிவு என்பதை ஏற்பதாகவும் குறிப்பிடுகிறேன்.

என்னால் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ........................................................................................................................ வானொலி நிகழ்ச்சி /ஆக்கம் வானொலி அரச விருது வழங்கல் விழா 2019 தொடர்பாக சமர்ப்பிப்பதற்கான உரிமை மற்றும் அதிகாரம் என்னையே சார்ந்தது. என்னால் சமர்ப்பிக்கப்படுகின்ற வானொலி நிகழச்சி ஆக்கம் தொடர்பாக உரிமை கோருவதற்கு வேறு எவரும் அல்லது எந்தவொரு நிறுவனமும் இல்லை என்றும் உறுதியளிக்கின்றேன். ஏதாவது கேள்விகள் ஏற்பட்டால் அதனை தீர்த்து வைப்பதும் எனது பொறுப்பாகவே கருதுகின்றேன்.

தயாரிப்பாளர் /அறிவிப்பாளர் /விண்ணப்பதாரியின் பெயர் : ……………………………

கையொப்பம் :- ……………………………

திகதி :- ………………………………

8. நிறுவனத்தின் பரிந்துரை :

வானொலி அரச விருது வழங்கல் விழா 2019 இற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ள, ...................................... எனும் தயாரிப்பாளர் /அறிவிப்பாளர் /கலைஞரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ..................................................................... நிகழ்ச்சி/ ஆக்கம் ........................................................................................... வானொலி சேவையில் 2017, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2018 யூன் மாதம் 30 ஆந் திகதிக்கு உட்பட்ட நாட்களுக்குள் ஒலிபரப்பப்பட்டதாகவும் குறித்த

*விழாவிற்கு சமர்ப்பிப்பதை அனுமதிப்பதாகவும் குறிப்பிடுகிறேன். பிறிதொரு நபரொருவர் /நிறுவனமொன்று உரிமைகள் முன்வைக்கப்பட்டால் அச் சிக்கலை தீர்த்துக் கொடுக்கும் பொறுப்பை ஏற்பதாகவும் குறிப்பிடுகின்றேன்.*

*நிறுவனத் தலைவர் /பிரதிநிதியின் பெயர் :* ................................................

*பதவிப் பெயர் :* ..................................................

*கையொப்பம் :* ............................................

*திகதி :* .....................................

*(உத்தியோகப்பூர்வ பதவி முத்திரை)*

*9. பிறிதொரு சட்டப்பூர்வமான உரிமையாளர் /தயாரிப்பு நிறுவனம் /முகவர் நிறுவனமொன்று அரச சார்பற்ற நிறுவனமாயின் அது தொடர்பான பிரகடனம்*

*சட்டப்பூர்வமான உரிமையாளரின் பெயர் :* ................................................

*பதவிப் பெயர் :* ..................................................

*முகவரி :* ......................................................................

*நிலையான தொலைபேசி இல. :* ............................................

*கைத்தொலைபேசி இல. :* ...................................................

*வானொலி அரச விருது வழங்கல் விழா 2019 தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள* ...................................... .............. *எனும்* ................................................. *நிகழ்ச்சி/ ஆக்கம் / வர்த்தக விளம்பரம் / பிரதி / ஏனையவை தொடர்பாக சட்டப்பூர்வமான உரிமை மேலே குறிப்பிடப்பட்டுள்ள எனது /நிறுவனம்/உண்மை என்பதாகவும், இவ் விழாவிற்கு முன்வைப்பதில் எவ்வித தடைகளும் இல்லை எனவும் பிறிதொரு நபரொருவர் /நிறுவனமொன்று உரிமைகள் முன்வைக்கப்பட்டால் அச் சிக்கலை தீர்த்துக் கொடுக்கும் பொறுப்பை ஏற்பதாகவும் குறிப்பிடுகின்றேன். (பொருந்தாத சொற்களை கீறிடுக)*

*கையொப்பம்* ...................................

*திகதி* ....................................

*(உத்தியோகப்பூர்வ பதவி முத்திரை)*

*08-542*

---

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

கத்தோலிக்க மறைப் பாடசாலை

***இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2017 (2018)***

***சட்ட விதிமுறைகள் :***

*1. கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் இதற்கென அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.*

*2.* ***பரீட்சை நிலையம்.***- *நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரரின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். இருப்பினும் குறிப்பிட்ட ஒரு பரீட்சை நிலையத்தில் போதியளவு விண்ணப்பதாரர்கள் இல்லாவிடின் அப்பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அதற்குரிய விண்ணப்பதாரர்கள் அதற்கு அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்தில் மேற்படி பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்கள் மற்றும் நகரங்களடங்கிய பட்டியல் இணைப்பு I இல் தரப்பட்டுள்ளன.*

3. **ஊடக மொழி**.- இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் மாத்திரம் நடைபெறும்.

4. **தகுதி**.- இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் கீழ்வருவனவற்றில் ஏதேனும் ஒரு தகைமையைப் பெற்றிருக்க வேண்டும் :-

4.1 மறைப் பாடசாலையொன்றில் பத்தாம் தரத்தில் சித்தி பெற்று மறைப் பாடசாலையின் இறுதி சான்றிதழ் பத்திர வகுப்பில் ஒரு வருடம் கல்வி பயின்றிருத்தல் ;

4.2 தேசிய கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் அல்லது கல்வி பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்தி பெற்றிருத்தல். அல்லது சிரேட்ட பாடசாலை சான்றுப்பத்திர பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.

4.3 அந்தந்த மறை மாவட்டத்தில் நடைபெறும் வருடாந்த மறைக்கல்வி பரீட்சையில் பதினோராந்தர வகுப்பில் சித்திபெற்றிருத்தல்.

**குறிப்பு**.- (i) இப்பரீட்சையில் தோற்றும் விண்ணப்பதாரர்கள் மேலே பந்தி 4 இல் கேட்கப்பட்டுள்ளதற்கேற்ப தகுதி பெற்றுள்ளார் என்பதை மறைக்கல்வி பாடசாலைப் பொறுப்பாசிரியர் அல்லது பங்குக் குருவானவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் மறைப் பாடசாலை விண்ணப்பதாரராக இருந்தால் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

5. **விண்ணப்பித்தல்** :

5.1 கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்காக பரீட்சைத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து மறைப் பாடசாலைகளுக்கும் தேவையான விண்ணப் பப்படிவங்கள், அறிவுறுத்தல் பத்திரங்கள் உரிய காலத்தில் வழங்கப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள் விண்ணப்பப்படிவம் கிடைக்காவிட்டால் மறைப் பாடசாலையின் பெயர், முகவரி, விண்ணப்பதாரரின் எண்ணிக்கை ஆகிய விபரங்களை உள்ளடக்கிய கடிதம் மூலம் இவ்வறிவித்தலின் 5 : 6 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 2018.08.24 ஆந் திகதிக்கு முன் அறிவித்து விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5.2 விண்ணப்பதாரர் தனிப்பட்ட விண்ணப்பதாரராக பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார். ஆயினும், அறிவுறுத்தல் 4 இல் கேட்கப்பட்டுள்ள தகுதியிருப்பின் தமது வதிவிடத்துக்கண்மையிலுள்ள மறைப் பாடசாலையின் ஊடாக பரீட்சைக் கட்டணமாக 200 ரூபாவைச் செலுத்தி பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கலாம். இதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் சகல மறைப் பாடசாலைகளின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

5.3 மறைப் பாடசாலைப் பொறுப்பாசிரியரினால் முன்வைக்கப்படும் இவ்விண்ணப்பங்களின் இரண்டு பிரதிகள் தயாரிக்கப்பட்டு முதல் பிரதி பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டுமென்பதுடன் இரண்டாம் பிரதி மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் வசம் வைத்திருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் இரண்டிலும் மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

5.4 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2018.09.17 ஆந் திகதி ஆகும்.

5.5 விண்ணப்பங்கள் தெளிவாகவும், பிழையின்றியும் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு நாம் குறிப்பிட்ட கடைசித் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.6 மறைப் பாடசாலையின் கணினி இலக்கத்தையும், முகவரியையும் சரியாகக் குறிப்பிடப்பட்டிருப்பதோடு முகவரி மாற்றப்பட்டிருப்பின் அதை எமக்கு அறிவிக்க வேண்டும். தொலைபேசி வசதியிருப்பின் அதன் இலக்கத்தையும் குறிப்பிடுக. நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிப் பரீட்சை - 2018" என்பதையும் விண்ணப்பிக்கும் நகரத்தையும் குறிப்பிட வேண்டும். விண்ணப்பத்துடன் வேறெந்த சான்றிதழையும் இணைக்கத் தேவையில்லை.

5.7 விண்ணப்பதாரியின் உரிய சான்றிதழ் பற்றிய தகுதியை, விண்ணப்பதாரியை உறுதி செய்யும் மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் அல்லது பங்குத் தந்தை அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

5.8 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் எல்லா பரீட்சார்த்திகளினதும் விண்ணப்பப்படிவத்தில் பூரணப்படுத்தியுள்ள தகவல்களை தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பார்த்து கையொப்பமிட வேண்டும்.

5.9 விண்ணப்பதாரிகள் ஒப்பமிடாத, அழிக்கும் வெண்மை பயன்படுத்திய மற்றும் வேறு குறைபாடுகளுடன் கூடிய விண்ணப்பப்பத்திரங்களும், விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்கான கட்டணம் 200 ரூபாவாகும். இருப்பினும், முதன் முதலில் தோற்றும் விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்த தேவையில்லை. நூன சித்தியைப் பூர்த்தி செய்ய வேண்டிய பாடத்திற்கான கட்டணம் 50 ரூபா ஆகும்.

6.1 ***பரீட்சைக் கட்டணம் செலுத்தல்***.- விண்ணப்பதாரர் அனைவரினதும் பரீட்சைக் கட்டணத்தை பொறுப்பாசிரியர் ஒன்று சேர்த்து இலங்கையில் ஏதாவதொரு தபால் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு, அப்பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தின் பின்னால் ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை நீங்களும் வைத்திருப்பது நன்று (முத்திரை மற்றும் காசுக்கட்டளை போன்றவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

6.2 ***பரீட்சைக் கட்டணம் மீளப்பெறல்***.- எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவோ, மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

7. **அனுமதிப்பத்திரம்**.- பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால், விண்ணப்பித்த மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரூடாக அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்.

7.1 பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமது அனுமதிப்பத்திரத்தில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்தி பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தமது அனுமதிப்பத்திரத்தைக் கொடுக்காவிட்டால் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தமக்கு அளிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தை விட்டு வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் அவரது பரீட்சார்த்தித் தகவு இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதிப்பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் மறைப் பாடசாலையின் பொறுப்பாசிரியரினால் அல்லது பங்குத் தந்தையினால் அல்லது அரச பாடசாலையொன்றின் அதிபரினால் அல்லது வருடமொன்றிற்கு 2,40,360 ரூபாவை விட கூடிய திரட்டுச் சம்பளத்தைப் பெறும் அரசின் நிரந்தர அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 7 நாட்களுக்கு முன் அனுமதிப் பத்திரம் கிடைக்காவிடின் அந்த மறைப்பாடசாலை பொறுப்பாசிரியரினூடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங் களில் கீழ்க் குறிப்பிட்ட விபரங்களை அறிவிக்க வேண்டும் :-

(1) பரீட்சையின் பெயர் ;
(2) மறைப் பாடசாலையின் பெயர் ;
(3) மறைப் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள கணினி இலக்கம் ;
(4) விண்ணப்பதாரியின் முழுப் பெயரும் முகவரியும் ;
(5) விண்ணப்பித்த பரீட்சை நிலையம்/நகரம் ;
(6) விண்ணப்பப்பத்திரம் தபாலிடப்பட்ட தபாற்கந்தோர் ;
(7) விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட பதிவு எண்ணும் திகதியும் ;
(8) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பின் அந்தப் பற்றுச்சீட்டு இலக்கம், திகதி, தபால் அலுவலகம்.

8. **ஆள் அடையாளம்**.- ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மண்டப மேற்பார்வை யாளர் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் பரீட்சார்த்திகள் தம்மை அடையாளப்படுத்தும் ஆவணத்தைச் சமர்ப்பிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றில் ஒன்றைப் பயன்படுத்தலாம் :-

8.1 தேசிய ஆள் அடையாள அட்டை ;
8.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
8.3 தபால் ஆள் அடையாள அட்டை.

9. **சித்தி பெற்றமையைத் தீர்மானித்தலும், பெறுபேற்றை வெளியிடலும்.**- இத்தேர்வுக்கான வினாத்தாள்களின் எண்ணிக்கை நான்கு ஆகும். பரீட்சையில் சித்திபெறுவதற்கு பரீட்சார்த்தி நான்கு வினாத்தாள்களிலும் சித்திபெற வேண்டும். ஆயினும் இந்நான்கினுள் ஏதேனும் ஒரு பாடத்தில் மாத்திரம் சித்திபெறாவிடின் அது நூன சித்தியாகக் கருதப்படும். பரீட்சைக்குத் தோற்றிய வருடத்திலிருந்து தொடர்ந்து வரும் இரண்டு (02) வருடங்களுக்குள் அந்நூன சித்தி பெற்ற பாடத்திற்கு மீண்டும் தோற்றி அதில் சித்தி பெற வேண்டும். (இது 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.) நூன சித்தி பெறும் மாணவர்கள் அதனைப் பூர்த்தி செய்யும்போது அப்பாடத்திற்கு மட்டுமே தோற்ற வேண்டும்.

9.1 எல்லாப் பாடங்களின் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 100 புள்ளிகள் வழங்கப்படுவதுடன் சித்தி பெறும் தரங்களுக்குரிய புள்ளி இடைவெளி மற்றும் குறியீடு என்பன கீழே தரப்பட்டுள்ளது :

| புள்ளி ஆயிடை | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0-34 | சித்தியின்மை | F |
| 35-54 | சித்தி | S |
| 55-69 | திறமைச் சித்தி | C |
| 70-100 | விசேட சித்தி | D |

9.2 பரீட்சார்த்திகளின் பெறுபேற்று அட்டவணை அந்தந்த மறைப் பாடசாலைப் பொறுப்பாளருக்கு தபால் மூலம் அனுப்பப்படும்.

10. **சான்றிதழ் பத்திரம்.**- இத்தேர்வில் சித்தி பெற்ற அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

11. **விடைத்தாள் மீள் பரிசீலனை.**- மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரின் வேண்டுகோளின்படி மாத்திரம் விடைத் தாள்கள் பரிசீலனை செய்யப்படும். இத்திணைக்களத்தினால் வெளியிடப்படும் படிவத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம். இதற்காக அறவிடப்படும் கட்டணத் தொகை பற்றி அவ்வப்போது மாற்றம் செய்ய இடமுண்டு. அதுபற்றி விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படும். ஏற்கனவே வெளியிடப்பட்ட பெறுபேற்றில் ஏதும் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இப்பணம் மீளத்தரப்படும். எக்காரணத்தைக் கொண்டும் விண்ணப்பதாரருக்கோ அவரது பிரதிநிதிக்கோ விடைத்தாள்களைப் பரிசீலிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

12. இச்சட்டதிட்டங்களுக்கும், பாடத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒழுங்கு முறைகளுக்கும் ஏற்ப செயற்படுவதற்கு அனைத்து விண்ணப்பதாரரும் கட்டுப்பட்டு இருப்பதோடு இந்த ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்காதோர் பற்றிய விடயத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதும் ஆகும்.

பீ. சனத் பூஜித,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஓகத்து 10.

8-935

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.